பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
29 08 2025 FRIDAY 7 15 AM
ஆகாஷவாணி – செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – ஜப்பான் இடையிலான இருதரப்பு உறவுகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தமது பயணம் அமையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் இணையதள வசதி உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை 63 புள்ளி ஐந்து சதவீதமாக அதிகரித்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சகம் கூறியுள்ளது.

3. தேசிய விளையாட்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

4. கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக இமாச்சலப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

5. ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டி பீகார் மாநிலம், ராஜ்கீரில் இன்று தொடங்குகிறது.

> > > > > > < < < < <

இந்தியா – ஜப்பான் இடையிலான இருதரப்பு உறவுகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தமது பயணம் அமையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக டோக்கியோ சென்றடைந்த பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

ஜப்பான் பிரதமர் திரு. *Shigeru Ishiba*வுடன் நடத்தவுள்ள பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ள பேச்சுவார்த்தைகளை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளதாகவும், பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கு இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்த இது உதவும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

> > > > > > < < < < <

புலம் பெயர் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்து மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மண்டாவியா, சவூதி அரேபியா மனிதவளம் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சர் அஹ்மத் பின் சுலைமான் அல்-ராஜ்ஹியுடன் பேசினார்.

தொழிலாளர்களின் திறன்களை அதிகரித்தல் அவர்களுக்கான பல்வேறு திட்டங்களை மேலும் விரிவு படுத்துதல் உள்ளிட்டவை குறித்து அவருடன் கருத்துக்களை பறிமாறிக்கொண்டதாக சமூக ஊடக பதிவில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

> > > > > > < < < < <

நாட்டில் இணையதள வசதி உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை 63 புள்ளி ஐந்து சதவீதமாக அதிகரித்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சகம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த 2023-24ஆம் ஆண்டு இணையதள வசதி கொண்ட பள்ளிகளின் எண்ணிக்கை 53 புள்ளி ஒன்பது சதவீதமாக இருந்ததாகவும், தற்போது, 63 புள்ளி ஐந்து சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, பள்ளிகளில் மின்சாரம், குடிநீர் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள் 90 சதவீதம் அளவுக்கு உள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மாணவர்களின் இடைநிற்றல், 8 புள்ளி 2 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

> > > > > > < < < < <

ஹாக்கி விளையாட்டு வீரர் மேஜர் தியான்சந்தின் பிறந்த தினம், தேசிய விளையாட்டு தினமாக இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி. பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

> > > > > > < < < < <

ஜெய்ப்பூரில் மருத்துவர்களின் அலட்சியத்தால் 26 வயது பெண் ஒருவர் இறந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக தேசிய மனித உரிமைகள் ஆணையம் நகர காவல்துறை ஆணையர் பதில் அளிக்க நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ஊடங்களில் வந்த செய்தியை கவனத்தில் எடுத்துக் கொண்ட ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை நடத்த முடிவு செய்தது.

ஜெய்ப்பூரில் எஸ்எம்எஸ் மருத்துவக் கல்லூரி மகளிர் மருத்துவமனையில் பிரசவத்திற்குப் பிறகு அந்தப் பெண் இறந்ததாக ஆணையம் கூறியுள்ளது.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு அதிக ரத்தப்போக்கு மற்றும் வலியால் துடித்தபோதும், மருத்துவமனை ஊழியர்களோ அல்லது மருத்துவர்களோ அவரை கவனித்துக் கொள்ளவில்லை என்று அந்தப் பெண்ணின் குடும்பத்தினர் குற்றம் சாட்டினர்.

குடும்ப உறுப்பினர்களை அவரைச் சந்திக்கவோ அல்லது வார்டில் இருந்து அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றவோ அவர்கள் அனுமதிக்கவில்லை" மனித உரிமைகள் ஆணையம் மேலும் தெரிவித்துள்ளது.

> > > > > > < < < < <

இமாச்சலப் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் இரண்டு தேசிய நெடுஞ்சாலைகள் உட்பட 524 சாலைகள் சேதமடைந்துள்ளன.

1,230 மின்மாற்றிகள் பாதிக்கப்பட்டுள்ளன. 416 நீர் விநியோக திட்டங்கள் செயல்படவில்லை என்று மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, சம்பா மாவட்டத்தில் மழை வெள்ளத்தில் சிக்கித் தவித்த மணிமஹேஷ் யாத்திரை மேற்கொண்டவர்களில் இதுவரை 3,000 க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளதாக அம்மாநில துணை முதலமைச்சர் முகேஷ் அக்னிஹோத்ரி கூறியுள்ளார்.

நிலைமை கட்டுக்குள் உள்ளது என்றும், வதந்திகளை நம்பவேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த ஜூன் 20 ஆம் தேதி பருவமழை தொடங்கியதிலிருந்து இமாச்சலப் பிரதேசத்தில் இதுவரை 312 பேர் உயிரிழந்துள்ளனர்

நிலச்சரிவு, திடீர் வெள்ளம், மேக வெடிப்பு மின்சாரம் தாக்குதல் மற்றும் வானிலையால் ஏற்பட்ட பிற சம்பவங்களால் 160 பேர் உயிரிழந்ததாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தெலுங்கானாவில், மாநிலத்தின் பல பகுதிகளில் பெய்த கனமழையால் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

காமரெட்டி, நிர்மல், மேடக், நிஜாமாபாத் மாவட்டங்களில் பல கிராமங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

ராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் துணைப் பேரிடர் மீட்புப் படையின் தீயணைப்புத் துறை குழுக்கள் இதுவரை ஆயிரத்து 440 பேரை மீட்டுள்ளனர்.

தாழ்வான பகுதிகளில் இருந்து பொதுமக்கள் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாநிலத்தில் பல இடங்களில் சாலைகள் மற்றும் ரயில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் பல நீர்த்தேக்கங்கள் முழு கொள்ளளவை எட்டியுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது

>>>>>><<<<<

பலூசிஸ்தானில் கடந்த ஜூலை மாதத்தில் நூற்றுக்கணக்கான பலூச் பொதுமக்கள் காணாமல் போனதாகவும், பலர் பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டதாகவும் முன்னணி மனித உரிமைகள் அமைப்பான பலூசிஸ்தான் மனித உரிமைகள் கவுன்சில் கூறியுள்ளது.

காணாமல் போனவர்கள் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகள் அந்த மாகாணத்தில் அதிகரித்து வருவதாகவும் மாகாணம் முழுவதும் காணாமல் போன 112 பேர் குறித்த வழக்குகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் அதே காலகட்டத்தில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினரால் ஐந்து பெண்கள் உட்பட 49 பேர் கொல்லப்பட்டதாகவும் அந்த அமைப்பு மேலும் கூறியுள்ளது

>>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரில் வரவிருக்கும் ஈத் மற்றும் மிலாதுநபி பண்டிகைக்கான முன்னேற்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா நேற்று ஸ்ரீநகரில் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பண்டிகைகளின் போது, நகரில் போக்குவரத்து சீராக இருக்கவும், பொதுமக்கள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு நெரிசல் இல்லாமல் செல்லவும் உரிய ஏற்பாடுகளை செய்யுமாறு அரசு அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டார்.

> > > > > > < < < < <

ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் உட்பட பல்வேறு ஆயுதங்களைப் பயன்படுத்தி உக்ரேனிய இராணுவ நிலைகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் யுக்ரைன் தலைநகர் க்யூவ் நகரில் ஏராளமான கட்டிடங்கள் சேதமடைந்தன.

இதில், 4 குழந்தைகள் உட்பட 21 பேர் உயிரிழந்ததாக யுக்ரைன் அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யுக்ரைனின் 10 மாவட்டங்களில் உள்ள 33 முக்கியமான கட்டிடங்கள் இந்த தாக்குதலில் சேதமடைந்ததாகவும் அவர்கள் கூறினர்.

> > > > > > < < < < <

ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டி பீகார் மாநிலம், ராஜ்கீரில் இன்று தொடங்குகிறது.

A – பிரிவில் நடைபெறவுள்ள முதல் போட்டியில், இந்தியா - சீனாவை எதிர்கொள்கிறது.

இந்தப் பிரிவில் ஜப்பான், கஸகஸ்தான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

ஐந்து முறை பட்டம் வென்ற தென்கொரியா, மலேசியா, பங்களாதேஷ், சீன தைபே ஆகிய அணிகள் B – பிரிவில் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வரலாற்றுச் சிறப்புமிக்க பீகார் மாநிலம், ராஜ்கீர் நகரில் நடைபெறவுள்ள ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியில் பங்கேற்கும் பல்வேறு நாடுகளின் அணியினருக்கும், அதிகாரிகளுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

தேசிய விளையாட்டு தினமான இன்று இந்தப் போட்டி தொடங்குவது சிறப்பானது என்றும் குறிப்பிட்டுள்ள அவர், இந்தியா மற்றும் ஆசியாவில் உள்ள லட்சக்கணக்கான மக்கள் மனதில் ஹாக்கி விளையாட்டுக்கு தனி இடம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டி, ஆசிய ரக்பி சாம்பியன் போட்டி உட்பட போட்டிகளை பீகார் மாநில அரசு சிறப்பாக நடத்தியுள்ளதாகவும், பீகாரின் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு உதாரணமாக இது திகழ்வதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

> > > > > > < < < < <

*டைமண்ட் லீக் தடகள போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியில் 85 புள்ளி பூஜ்யம் ஒன்று மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

> > > > > > < < < < <

*உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*பிரான்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 19-21, 21-15, 21-17 என்ற செட்கணக்கில் சீனாவின் Liang – Wang இணையை வென்றது.*

> > > > > > < < < < <

*ஸ்லோவேனியாவில் நடைபெற்று வரும் European கோப்பை பாரா வில்வித்தை போட்டியில் இந்தியா 3 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

> > > > > > < < < < <

*காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Ajaya Babu தங்கப்பதக்கம் வென்றார்.*

*அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 81 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

> > > > > > < < < < <

*தேசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் வேலவன் செந்தில்குமார் பட்டம் வென்றார்.*

> > > > > > < < < < <

*சீனாவில் நடைபெற்று வரும் இளையோர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியா 26 பதக்கங்களை உறுதி செய்துள்ளது.*

> > > > > END < < < < <